12th February 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்கள் இந்தப் பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க முன் வருவார்களேயானால் அதற்கு எந்த அளவு உதவி கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி ஒரு கொள்கை இப்பொழுது திட்டவட்டமாக வகுக்கப்பட்டிருக்கிறது. அதை யனுசரித்து யாராவது முன் வருவார்களேயானால் அந்த யோசனை ஆலோசிக்கப்பட்டு அது சரியான யோசனையாக இருந்தால் அதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்கனவே ஒரு பாலிடெக்னிக் வட ஆற்காடு ஜில்லாவில் ஆரம்பிக்க மத்திய சர்க்கார் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும், அதில் 25 சத விகிதம் கொடுத்தால் அந்த ஜில்லாவில் ஆரம்பிக்கப்படும் என்கிற நோக்கத்தோடு 1958-ம் ௵ ஜனவரி மாதம் 30-ந் தேதியில் வட ஆற்காடு கலெக்டர் தலைமையில் நடந்த ப்ளானிங் கமிட்டி கூட்டத்தில் அந்த 25 சத விகித ரூபாயைக் கொடுப்பதாக ராஜகோபால் நாயுடு அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தீர்மானமும் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே குடியாத்தத்தில் உடனடியாக ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

* THE HON. SRI C. SUBRAMANIAM : 1958-ம் ௵ ஜனவரி மாதம் 30-ந் தேதியில் என்றால் இப்பொழுது 12 நாட்கள்தான் ஆகிறது. இன்னும் அந்தத் தகவல் எங்களுக்கு வரவில்லை. தனிப்பட்டவர்கள் ஆரம்பித்தால், அது சரியான யோசனையாக இருந்தால் அதற்கு வேண்டிய உதவி செய்ய சர்க்கார் திட்டம் வகுத்துள்ளது. அத்துடன் கால்வாசி தொகை கொடுப்பதோடு மட்டுமில்லாமல் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு அதற்கு வேண்டிய செலவையும் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும்.

Jamabandi at Bhavani.

* 72 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of petitions given by the Harijans to the Jamabandi Officer at the time of jamabandi in 1957 in Bhavani taluk, Coimbatore district ; and

(*b*) the number disposed of?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The particulars have been called for from the Collector of Coimbatore.

இதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைக் கொடுக்கும்படியாக கலெக்டரைக் கேட்டிருக்கிறோம்.

SRI P. G. MANICKAM : ஹரிஜனங்கள் மனைக்கட்டு நிலங்கள் வேண்டுமென்றும், போதிய குடி தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்றும் விண்ணப்பித்திருக்கிறார்கள். அதை உடனடியாக விசாரித்து அதற்கு பரிகாரம் தேட முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயம் அங்கத்தினர் கேள்வியில் இருந்தால் அதுவும் புள்ளிவிவரத்தில் வரும்.

Oil refinery.

* 73 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start an oil refinery in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI N. K. PALANISAMI : எண்ணெ சுத்திகரிப்புச் சாலை ஏற்படுத்த தனிப்பட்டவர்கள் யாராவது சர்க்காரை அணுகினார்களா ? அப்படி அணுகினால் சர்க்கார் அதற்கு உதவி செய்வார்களா ?